# பெண்ணியம் காக்கும் கண்ணியத் தலைவா! நீடூழி வாழியவே.. நீ!

‘தளபதிதான் நான்கண்ட தலைவர்’ என்றேன்
தழல்போலும் முகஞ்சிவந்த என்ம னைவி
‘உளறாதீர்! அவர்தலைவர் இல்லை’ என்றாள்
உயிர்வலிக்க என்னவளை உற்றுப் பார்த்து

‘வளர்மதியே..உனக்கென்ன மதிபோ யிற்றா?
வானளவுப் புகழ்கொண்ட தலைவர் ஸ்டாலின்
தளர்வறியாப் போராளி! அவரைப் போய்நீ
தலைவரில்லை என்கின்றாய்’ எனச்சி னந்தேன்!

‘ஆமத்தான் நிச்சயமாய்ச் சொல்லு கின்றேன்
அவர்தலைவர் இல்லை’யென்றாள் என்கி ழுத்தி!
‘நாமமது தமிழரெனக் கொண்டோர் எல்லாம்
நம்தலைவர்’ என்கின்றார்; பேதைப் பெண்நீ

சேமமதைச் சிறுமையென உரைசெய் கின்றாய்
சீற்றத்தை வளர்க்காதே! சீக்கி ரம்சொல்!
பூமலரும் புன்னகைக்குள் பூகம் பத்தைப்
புதைத்தாற்போல் பேசாதே’ எனமு றைத்தேன்!

‘நேர்வகிட்டுக் காரியிவள் பேச்சில் என்றும்
நேர்மைதான் குடியிருக்கும் அத்தான்’ என்றாள்
‘சீர்வளர்க்கும் தலைவரையா குறைசொல் கின்றாய்
செத்தாய்நீ..’ எனப்பாய்ந்து குழல்பி டித்தேன்!

‘ஆர்வத்தீ தூண்டத்தான் நெய்வார்த் தேன்நான்
அத்தானே! அவரைத்தான் பிழைசொல் வேனா!
வார்த்தையினால் நீரன்றோ தவறி ழைத்தீர்!
வார்குழலைக் கைவிட்டு விளக்கம் கேளீர்!

ஆட்சிக்கு வந்ததுமே அலட்டல் இன்றி
அறிவுலகம் போற்றுகிற விதிகள் செய்தார்!
காட்சிக்கே எளியரெனக் கீழி றங்கிக்
கருணைக்கோர் தலைவரென மொழிகள் செய்தார்!

மாட்சியுடன் விண்ணப்பக் குறைகள் தீர்த்தார்!
மலர்ச்சியுடன் பலதலைவர் வாழ்த்தைப் பெற்றார்!
மீட்சிபெறும் தமிழ்நாட்டின் மேன்மை என்றே
பெண்களுக்குப் பேருந்துப் பயணம் தந்தார்!

உன்மத்தம் பிடித்ததுபோல் அவரை ஏசி
உயிர்வாழ்க்கை நடத்தியவர் தம்மைக் கூட
என்னோடு விருந்துண்ண வருவீர் என்றே
இளம்பிள்ளை போலழைத்துப் பெருமை கொண்டார்!

அன்னவரை நான்கண்ட ‘தலைவர்’ என்றால்..
‘அதுசிறிய சொல்லாட்சி’ அத்தான்! அந்த
மன்னவரை ‘வெறும்தலைவர்’ எனவி ளித்தால்
மனச்சாட்சி ‘இல்லை’யென மறுக்கும் அத்தான்!



நடையாலே மணக்கின்ற நல்லார் எங்கள்
நறுந்தலைவர் ‘தலைவர்களின் திலகம்’ அத்தான்!
படையாலே கனக்கின்ற போதும் எந்தப்
பந்தாவும் இல்லாத மனிதர் அத்தான்!

உடையாலும் வெள்ளை;அவர் உள்ளம் வெள்ளை!
உள்ளிருக்கும் கனவுகளோ வாச முல்லை!
விடையில்லாப் பிரச்சினைகள் எதுவும் இல்லை
வெளிச்சத்தில் உலவுகிறார் கலைஞர் பிள்ளை!

அவரைப்போய் நான்கண்ட தலைவர் என்றே
அலட்சியமாய்ச் செப்புகிறீர் அவரைப் போல
எவரிங்கே உழைக்கின்றார், நொடிகள் தோறும்!
இலக்குதனை நினைக்கின்றார், அடிகள் தோறும்!

தவறெங்கே நிகழ்ந்தாலும் கண்டிப் பாகத்
தண்டிப்பேன் எனச்சொல்லிக் கட்சிக் குள்ளும்
கவனத்தை வளர்க்கின்றார்; அவரை நீங்கள்
கவனமின்றி வெறுந்தலைவர் என்கின் றீரே!

தாய்க்குலமே கொண்டாடும் தலைவர்; வையத்
தமிழினமே பாராட்டும் பொதுத்த லைவர்;
சேயெல்லாம் கொண்டாடும் புதுத்த லைவர்;
சிந்தனையால் பேரெழுச்சித் தலைவர்; செல்லும்

வாயெல்லாம் மகிழ்விக்கும் குணத்த லைவர்;
வரலாற்றின் நிஜப்புரட்சித் தலைவர்; வந்த

நோயெல்லாம் தீர்க்கின்ற மூலி கைபோல்
நுண்ணறிவுக் கோலோச்சும் இனத்த லைவர்!

மண்ணுரிமைக் குரல்கொடுக்கும் மாத்த லைவர்!
மங்கையரை வாழ்விக்க மாதம் தோறும்
பெண்ணுரிமைத் தொகைவழங்கத் திட்டம் தீட்டும்
பேருலகப் புகழ்த்த லைவர்; மேற்ப டிப்பால்

கண்ணிகர்த்த கல்விபெற கல்லூ ரிக்குள்
கால்வைக்கப் பெண்களுக்குக் கரங்கொ டுக்கும்
தன்னிகரே இல்லாத திராவி டத்தின்
தாகவிடாய் தீர்க்கின்ற தமிழ்த்த லைவர்!

பேசரிய புகழ்கொண்ட பெருந்த லைவர்!
பேசாமல் பேசவைக்கும் செயல்த லைவர்!
ஏசவரு வோருக்கும் கனிவு காட்டும்
எழிற்பண்புத் தலைவரவர்; இன்னும் சொன்னால்

மாசறியா இனமானத் தலைவர்;நந்தம்
மாண்புமிகு முதலமைச்சர்! அவரை நீங்கள்
ஆசைபற்றி அறையலுற்ற ‘வெறுஞ்சொல்’ கேட்டேன்!
ஆவேசம் நான்கொண்டேன் அத்தான்’ என்றாள்!

‘கூன்கொண்ட பிறைநெற்றிக் கொடியே.. என்னைக்
கொல்லாமல் கொன்றவளே! அவச ரத்தில்
நான்கொண்ட வழக்குச்சொல் பொருந்தா தென்று
நயத்தக்க தேன்மொழிகள் நவின்றாய்; உன்னை



டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்

ஏன்கொண்டேன் எனக்கோபம் கொண்டேன்; ஆனால்
எதிர்கொண்டேன் உன்னாய்வுக் கண்ணோட் டத்தை!
வீண்கொண்டேன் நான்வெகுளி; மன்னிப் பாயா!
வெண்ணிலவே... !’ என்றவளை அள்ளிக் கொண்டேன்!

கற்பனைதான் என்றாலும் இந்தக் காட்சி
கனவுலகில் நிகழ்ந்தாலும் அடடா..என்ன
அற்புதமோ..என்றடியேன் அசந்து போனேன்!
அத்தனையும் தாய்க்குலமே ஏத்திப் போற்றும்

பொற்புடைய புகழாரம் எனக்கொள் கின்றேன்!
பொன்னுலகாய்ப் பெண்ணுலகை மாற்ற வந்த
சிற்பியெங்கள் தளபதியை வணங்கு கின்றேன்!
சிங்காரத் தமிழ்கொண்டு வாழ்த்துகின்றேன்!




சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (08.07.2023) சனிக்கிழமை, நடைபெற்ற Clinical Infectious Disease Societyன் 13 வது ஆண்டு மாநாட்டினை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன், அப்பல்லோ மருத்துவமனைகளின் துணைத் தலைவர் பிரித்தா ரெட்டி, எம்.எஸ்.சுவாமிநாதன், ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் சௌமியா சுவாமிநாதன், மருத்துவர்கள் செந்தூர்நம்பி, ராமசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு ஹுண்டாய் குளோவிஸ் தொழிற்சாலை சார்பில் அமைக்கப்பட்டுள்ள இரத்த சேமிப்பு பிரிவினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, ஒன்றியக் குழுத்தலைவர் எஸ்.டி.கருணாநிதி, ஒன்றியச் செயலாளர் ந.கோபால், பேரூர் செயலாளர் சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.